**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.548/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W-5 |
| Name | : | நடராஜன், வயது 62 |
| Father Name/Husband Name | : | சுப்பையா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தனியார் கம்பெனியில் கிளர்க் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of October 2023.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தனியார் கம்பெனியில் கிளர்க் ஆக வேலை செய்கிறேன். கடந்த 02.02.2022 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு இரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் உள்ள இந்திரா காம்பிளக்சிற்கு கிழக்கு காவல்நிலைய ஆய்வாளர் வந்து ஏமாற்றிய கேஸ் சம்பந்தமாக படம் வரைந்தார்.
2. பின்னர் என்னிடம் விசாரணை செய்து கையொப்பம் கேட்டார் நானும் வாட்ச் மேன் முருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான்.
3. **(அந்த ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நீங்கள் கையொப்பம் செய்த அன்று தான் போலிசார் உங்களை விசாரித்தார் என்றாலும் அதன் பிறகு விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றும் எத்தனை பக்கம்

எழுதியிருந்தது போன்ற உங்களுக்கு தெரியாது என்றால் படித்து பார்த்தேன் ஒன்றரை வருடம் ஆகிவிட்டதால் மறந்துவிட்டது.

2. படம் வரைந்த பேப்பரில் தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவஇடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக சொல்வது பொய் என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.